இந்த சட்டமன்றம் நடந்து விட வேண்டுமென்று அவர்கள் அக்கறை காட்டுவதாலே உண்மையிலேயே ஆளும் கட்சியில் இருக்கிற எங்களுக்கு கொஞ்சம் சலுகைகள் குறைவாக இருக்கிறது. மற்றவர்களுக்கு சலுகைகள் அதிகமாக இருக்கிறது. இதை நாங்கள் அனுமதிக்கிறோம். இங்கே எங்களுடைய உறுப்பினர்கள் எவ்வளவு வேதனைபடுகிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிதான் ஆக வேண்டும். மற்றவர்களுக்கு இருக்கிற அந்த வாய்ப்புகள் ஆட்சிக் கட்டிலிலே இருக்கிறவர்களுக்கு இல்லை. காரணம் நமது வீட்டு குழந்தை பேசாமல் இரு என்று அவர்கள் சொல்லிவிடுகிறார்கள். நாங்கள் கஷ்டப்படுகிறோம், எப்படியாவது சுமூகமாக நடக்கட்டும். ஆகவே உண்மையை நிரூபிப்பதற்கு எங்களுக்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது, என்று சொன்னாலும், மூன்று, நான்கு மாதங்களில் இந்த விஷயத்தைப் பற்றி உண்மைகள் வெளி வரப்போகிறது. அதுவரையில் தான் இந்த அறிக்கை வேலை செய்யும். தேர்தல் வந்தால் பயன்படும் என்று பார்த்துக் கொள்வார்களே தவிர உண்மை என்ன என்பது நீதிமன்றத்திலே ஆதாரங்கள் வெளி வருகிறபோது, அதற்குரிய விவரங்கள் வெளி வருகிற போது உண்மை வெளிவரும் என்பதை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

4. அறிவிப்புகள்.

அ. மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1982.

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்று பரிந்துரைகள் எதுவுமின்றி திருப்பியனுப்பப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ் நாடு 1982-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/1982).

2. தமிழ் நாடு 1982-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1982).

5. கவன ஈர்ப்புகள்:

(அ) கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற நூல் மற்றும் கூலி குறைக்கப் பெற்றிருப்பது.

1982 ஏப்ரல் 5]

திரு. பூ. மு. நரசிம்மன்: தலைவர் அவர்களே, ''செங்கல்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர்களுக்குக் கொடுக்கின்ற நூல் மற்றும் கூலியைக் குறைத்ததினால் அவர்கள் படும் இன்னல்'' குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

செங்கை மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டத்தில் சுமார் 32 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

பள்ளிப்பட்டு வட்டத்தில் செயல்பட்டு வரும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் நெய்யப்படும் துணி ரகங்களையும், நெய்யும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு, தேவையான நூலை, அரக்கோணம் மற்றும் காஞ்சிபுரம் கோ—ஆப்டெக்ஸ் நூல் விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதற்கான ''நூல் அட்டைகளும்'' (Yarn Cards) அப்பகுதியிலுள்ள சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களில் இயங்காத தறிகளை இயங்க வைப்பதின் மூலமும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலமும் நெய்யும் தறிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, அல்லது உற்பத்தி செய்யும் ரகங்கள் மாறும்போதும், மாற்றத்திற்கு ஏற்ப அவ்வப்போது நூல் ஒதுக்கீடுகளும் தேவையான அளவிற்கு அதிகரித்து வழங்கப்பட்டு வருகின்றன.

சங்கங்களில் பணமுடை ஏற்படும்போது அல்லது கோ—ஆப்டெக்ஸ் நூல் விற்பனை நிலையங்களில் தேவையான நூல் இருப்பில் இல்லாத காலங்களில் சங்கங்கள் நேரடியாக கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து நூல் கொள்முதல் செய்து கொள்ள ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தவிர, தற்பொழுது பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும், கோ-ஆப்டெக்ஸிலும் நிலவி வரும் நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு, சங்கங்களுக்கு, கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து தேவையான அளவிற்கு கடனுக்கு நூல் பெற்று வழங்க சரக உதவி இயக்குநர்கள் மற்றும் கூட்டுறவு நூற்பாலை நிர்வாக இயக்குநர்கள் கோரப்பட்டுள்ளனர்.

சங்க அங்கத்தினர்களுக்கு, அவர்கள் நெய்து தரும் ரகங்களுக்கேற்ப கூலி நிர்ணயம் செய்யப்பட்டு கூலி வழங்கப்பட்டு வருகிறது. நூல் விநியோகம் செய்யும்பொழுதே கூலி முன்பணமும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு

பள்ளிப்பட்டு வட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளர்களுக்கு நூல் மற்றும் கூலி கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. கூலியைப்பொறுத்த வரை, கலர் கா டாவுக்கு மட்டும் மீட்டர் ஒன்றுக்கு ரூ. 1.50 என இருந்ததை சமீபத்தில் சங்கத் தலைவர்களின் அனுமதியின் பேரில் ரூ: 1.43 என குறைக்கப்பட்டிருந்தது. அதை மீண்டும் ரூ. 1.50 அளவுக்கு உயர்த்தி கொடுக்கப்பட வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. பூ. மு. நரசிம்மன்: தலைவர் அவர்களே, விளக்க அறிக்கையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தறிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, அல்லது உற்பத்தி செய்யும் ரகங்கள் மாறும் போது, மாற்றத்திற்கு ஏற்ப அவ்வப்போது நூல் ஒதுக்கீடுகளும் தேவையான அளவிற்கு அதிகரித்து வழங்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நெசவாளர்களுக்கு கொடுக்கப்பட்ட நூலை துணியாக உற்பத்தி செய்து சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டு தங்களிடம் நூல் இல்லாமல் வேலையற்று நெசவாளிகள் பள்ளிப்பட்டு வட்டத்தில் வ டுகிறார்கள். எனவே நெசவாளர்கள் துயர் துடைக்க வேண்டும். அவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க தேவையான நூல் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

(முற்பகல் 11.00)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த தகவலின்மேல் அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. பூ. மு. நரசிம்மன்: துணைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு கொடுக்கப்படும் என்று விளக்க உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகள் கொள்முதல் செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் நெசவாளர்களுக்குக் கூலி தரப்படாமல் போய்விடுகிறது. எனவே, உற்பத்தியாகும் துணிகளைக் கொள்முதல் செய்ய அரசு துரித நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

VAIMAIYE VELLUM TRUTH ALONE TRIUMPHS